# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

# கணிதம்

## தரம் நான்கு (முதலாம் தவணை)

2022

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

## நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021,2022ஆம் ஆண்டுக்கான த 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத் இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசி கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியம பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்ப த்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களா உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இ உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெள படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்க இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

## தரம் 5 - கணிதம்

| அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|
| | 1. நான்கு இலக்கங்கள் வரையான எண்களைக் கூட்டும் பிரசினங்கள் தீர்ப்பார். | 1.1 ஒரு தடவை மாத்திரம் கொண்டு செல்லலுடன் நான்கு இலக்கங்கள் வரையிலான எண்கள் இரண்டைக் காட்டுவார்.<br><br>1.2 இரண்டு தடவை மாத்திரம் கொண்டு செல்லலுடன் நான்கு இலக்கங்கள் வரையிலான எண்கள் இரண்டைக் காட்டுவார். | அலகு 03: செயற்பாடு 01 - 04 | 13 - 19 | 02 மணி |
| | 2. பொது வித்தியாசம் 2 தொடக்கம் 10 வரையிலான எண் கோலங்களைக் கட்டியெலுப்புவார். | 2.1 பொது வித்தியாசம் 2 தொடக்கம் 5 வலையிலான எண்கோலங்களைக் கட்டியெலுப்புவார்.<br><br>2.2 பொது வித்தியாசம் 6 தொடக்கம் 10 வலையிலான எண்கோலங்களைக் கட்டியெலுப்புவார்.<br><br>2.3 தரப்பட்ட எண்கோலமொன்றின் கோலத்தை இணங்கண்டு அவ்வெண் கோலத்தை மேலும் கட்டியெலுப்புவார். | அலகு 04: செயற்பாடு 01 - 05 | 20 - 24 | 05 மணி |

| அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|
| | 3. நான்கிலக்கத்திற்கு மேற்படாத ஓர் எண்ணிலிருந்து மற்றுமோர் எண்ணைக் கழிக்கும் பிரசினங்களைத் தீர்ப்பார். | 3.1 நான்கிலக்க எண்ணொ-ன்றில் இருந்து அதிலும் சிறிய ஓர் எண்ணை, (ஒரு தடவை மாத்திரம் கொண்டு வருதலுடன்) கழிக்கும் பிரசினங்கள் தீர்ப்பார். | அலகு 05:<br>செயற்பாடு 01 - 04 | 25 - 32 | 05 மணி |
| | 4. பொது வித்தியாசம் 2, 3, 4, 5, 10 ஆகவுள்ள எண் கோலங்களைக் கட்டியெழுப்புவார். | 4.1 பொருள் தொகுதியெ-ான்றின் 1/2 இல் எத்-தனைப் பொருள்கள் எனக் கூறுவார்.<br><br>4.2 பொருள் தொகுதியொன்றின் நான்கில் ஒரு பங்கு, நான்கில் இரண்டு பங்கு, நான்கில் மூன்று பங்கான எத்தனைப் பொருள்கள் எனக் குறிப்பிடுவார். | அலகு06:<br>செயற்பாடு 01 - 04 | 33 - 39 | 03 மணி |

தரம் 5 - கணிதம்

| அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|
| | 5. மூவிலக்கத்திற்கு மேற்படாத எண்களை 2, 3, 4, 5 ஆல் பெருக்கும் பிரசினங்களைத் தீர்ப்பார். | 5.1 மூன்று இலக்கங்களுக்கு மேற்படாத யாதேனும் எண்ணை (ஒரு தடவை மாத்திரம் கொண்டுசெல்லலுடன்) 2, 3, 4, 5 ஆல் பெருக்கி விடையைக் கூறுவார்.<br><br>5.2 மூன்று இலக்கங்களுக்கு மேற்படாத எண்களை ஒரு தடவை மாத்திரம் கொண்டுசெல்லலுடன் 2, 3, 4, 5 ஆல் பெருக்கும் எளிய பிரசினங்கள் தீர்ப்பார். | அலகு 07:<br>செயற்பாடு 01 - 04 | 39 - 46 | 04 மணி |
| | 6. கடிகாரம் காட்டும் நேரத்தைக் கூறுவார். | 6.1 பன்னிரண்டு மணி முட் கடிகாரம் காட்டும் நேரத்தைக் கூறுவார். மணி நிமிடங்களில் நேரத்தைக் கூறுவார்.<br><br>6.2 முற்பகல், பிற்பகல் ஆகியவற்றைப் பயன்படுத்தி நேரத்தைக் கூறுவார்.<br><br>6.3 நேரத்தை இருபத்துநான்கு மணிக் கடிகாரத்தில் (சர்வதேச நியம முறைப்படி) கூறுவார். | அலகு 08:<br>செயற்பாடு 01 - 04 | 47 - 54 | 04 மணி |

| அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|
| | 7. மூவிலக்கம் வரையிலான எண்களை 2 தொடக்கம் 5 வரையிலான எண்ணொன்றினால் வகுக்கும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார். | 7.1 ஈரிலக்க எண்களை 2, 3, 4 இனால் வகுக்கும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார்.<br><br>7.2 மூவிலக்க எண்களை 2, 3, 4 இனால் வகுக்கும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார் | அலகு 09:<br>செயற்பாடு 01 - 04 | 55 - 60 | 04 மணி |
| | 8. கிலோமீற்றருக்கும் மீற்றருக்குமிடையிலான தொடர்பை இனங்கண்டு பிரசினங்கள் தீர்ப்பார். | 8.1 பெரிய நீளத்தை அளக்கும் அலகாக கிலோமீற்றரையும் அதன் நியமக் குறியீட்டையும் இனங்கண்டு பயன்படுத்துவார்.<br><br>8.2 கிலோமீற்றர் - மீற்றர் அலகு மாற்றங்கள் செய்வார்.<br><br>8.3 கிலோமீற்றர், மீற்றர் அடங்கிய எளிய கூட்டல் மற்றும் கழித்தல் பிரசினங்கள் தீர்ப்பார். | அலகு 10:<br>செயற்பாடு 01 - 04 | 61 - 66 | 04 மணி |

| அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|
| | 9. பணம் சார்ந்த எளிய கணித்தல்களைச் செய்வார். | 9.1 கூட்டல் கழித்தல் அடங்கியுள்ள பணம் சார்ந்த எளிய கணித்தல்கள் செய்வார்.<br><br>9.2 சில பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளபோது செலுத்த வேண்டிய பணத் தொகையைக் கணிப்பார்.<br><br>9.3 ஒரு பொருளை / சில பொருள்களைக் கொள்வனவு செய்து பணம் செலுத்திய பின் கிடைக்கும் மீதிப் பணத்தைக் கணிப்பார். | அலகு 11:<br>செயற்பாடு 01 - 04 | 67 - 72 | 04 மணி |
| மெத்த நேரம் | | | | | 35 மணி |